# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1851/20 - 2014 පෙබරවාරි මස 26 වැනි බදාදා- 2014.02.26

*1851/20 ஆம் இலக்கம் – 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல: விஎஸ்டபிள்யு/டீஎஸ்/எல்ஏஎன்டி/பிஎஸ்/ஜஎல்ஏவீஏ/டீ

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் அண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

ஆரம்ப பட இல.: யா 1326

அமைப்பு : கிராமம் : மாதகல்
பிரதேச செயலகப் பிரிவு : பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்
மாவட்டம் : யாழ்ப்பாணம்
மாகாணம் : வடக்கு மாகாணம்.

01. **துண்டு இல. 02**

காணியின் பெயர்: போதிப்புலம் ; விபரம்: 142 தென்னைமரம் 30-40 வருடங்கள், 08 மாமரம் 10-40 வருடங்கள், 201 பனைமரம் 10-80 வருடங்கள், 05 வேம்பு 10-40 வருடங்கள், 15 சவுக்கு 10-40 வருடங்கள், 04 நிரந்தர கட்டிடங்கள் ஒரு சிமெந்தினால் கட்டப்பட்ட கிணறும், தண்ணித்தொட்டியும் கொண்ட தோட்டம்; உரிமை கோருபவர்: சீ. ஆர். திசாநாயகம், 14, குயின்ஸ் வீதி, கொழும்பு 03; விஸ்தீரணம்: 4 ஏக்கர், 03 றூட், 24.8 பேர்ச்சஸ்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 04 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

காணியின் உரிமையை ஒப்புவிக்கும் உறுதிகளையும் மற்றும் சாதனங்களையும் விசாரணையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

எஸ். முரளீதரன்,
பிரதேச செயலாளர்,
சண்டிலிப்பாய்.

பிரதேச செயலகம்,
சண்டிலிப்பாய்.
2014, பெப்புருவரி 25.

3-05


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்த பதிவிறக்கம் செய்ய முடியும்.